[11th March 1969

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) ஜப்பானுக்கு முன்னுள் முதல் அமைச்சர் அவர்கள் சென்றிருந்த போது திருவாளர் மாருபேனி இடா நிறுவனத்தினர் கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களைச் செறிவு படுத்துவதற்கு, கஞ்சமலை இரும்புக் கனி வளர்ச்சியில் அக்கறை காட்டினர். சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்புகளிலும் அவர்கள் அக்கறை காட்டினர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இரும்பு தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்களான இரும்புக் கனிகளை இங்கிருந்து கப்பல்களில் ஏற்றி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து அந்தப் பணத்தை வைத்து இங்கே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவது என்று முன்னுள் முதலமைச்சர் பேசியதாக எனக்கு ஞாபகம். அந்த யோசனை இப்போது அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது அந்தப் பிரச்னை யில்லை. இரும்புக் கனிகளை ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வளவு கொண்டு வரவேண்டுமென்று பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது materialise ஆகும்போது அதற்குள்ளாக ஸ்டீல் பிளாண்ட் வராவிட்டால், என்ன செய்வது என்பது அப்போதைக்கு உள்ள நிலைமைக்கேற்ப பரிசீலிக்க வேண்டும்.

Export of yarn.

* 194 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) the quantity of yarn stagnated as on 1—11—1968 in Co-operative Spinning Mills in Tamil Nadu; and

(b) whether there is any proposal to export yarn to foreign countries?

நூல் ஏற்றுமதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 1—11—1968 அன்றுள்ளவாறு எவ்வளவு நூல் தேங்கியிருந்தது?

(இ) இதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 1—11—1968 வரை தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தேங்கியிருந்த நூல் 979 பேல்களாகும்.

11th March 1969]

(இ) இப்போதுள்ள நூற்புத் தொழிலிலுள்ள மந்த நிலையைக் கருதி தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் உற்பத்தியாகும் நூலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வது பற்றி முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கு ஆரம்பமாக 20-ஆம் நம்பர் 30-ஆம் நம்பர் நூலை ஏற்றுமதி செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. இதன்படி மதுரை, கோயம்பத்தூர், கன்யாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலைகள் இதுவரை 800 பேல் நூலை, பர்மாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளன. இன்னும் நூல் ஏற்றுமதி, வெளி நாட்டிலிருந்து நூல் தேவைபற்றி வரும் கோரிக்கைகளைப் பொறுத்து இருக்கின்றது.

Utilization of manpower

* 195 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Central Government has reduced in the current financial year, the subsidy to the State Government to develop the public welfare works of panchayats by utilisation of manpower; and

(b) if so, the action taken thereon?

மனித சக்தியைப் பயன்படுத்தல்

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மனித சக்தியைப் பயன்படுத்தி ஊராட்சிகளின் பொது வேலைகளை அபிவிருத்தி செய்வதற்கு மத்திய அரசு மாநில அரசிற்குக் கொடுத்து வந்த நிதி உதவியை நடப்பு நிதி ஆண்டில் குறைத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இவ்வாண்டு மைய அரசின் நிதி நிலை அறிக்கையில் மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டத்திற்கு சென்ற ஆண்டை விட குறைந்த மான்யம் ஒதுக்கியதால் ஒவ்வொரு மாநில அரசிற்கும் சென்ற ஆண்டைவிட குறைந்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனை உயர்த்தித் தருமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையில் இதுகாறும் மைய அரசின் திட்டமாக இருந்த 'கிராம மனிதசக்தி திட்டம்' நான்காவது திட்டத்தில் மாநில அரசிற்கு மாற்றப்பட்டுள்ளதாலும், நடப்பு ஆண்டில், நிதி ஒதுக்கீடு குறைந்து இருப்பது பற்றி மேற்கொண்டு நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

MR. CHAIRMAN : Questions are over.